THE WORLD NEEDS THE WORD
IBT
பிப்ரவரி 2025
மலர் 23, இதழ் 5

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

## "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்" மத்தேயு 20 : 16



## “அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்” மத்தேயு 20 : 16.

அழைப்பு என்றால் என்ன? எல்லோருக்கும் அழைப்பு கிடைக்கிறதா / வருகிறதா என்று பார்த்தால் கிடையவே கிடையாது. அப்படியென்றால் அழைப்பு யாருக்கு? யார் அதற்குத் தகுதி? ஒரு நேர்காணலுக்கு (Interview) வரும்படி கம்பெனியின் எஜமானன் விளம்பரம் கொடுக்கிறார். பத்து பேருக்கு மட்டுமே உத்தியோக இடம் இருக்கும் பட்சத்தில் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் பேர் விண்ணப்பம் செய்வார்கள். நேர்கானலுக்கும் படையெடுத்து வருவார்கள். அழைக்காமலேயே அழைக்கப்பட்டவர்களாக அநேகர் வருவார்கள். அந்த பத்து பேரில் நான் ஒருவனாக தேர்வு செய்யப்பட மாட்டேனா என்ற ஆசையில் அநேகர் வருவார்கள். ஆனால், பத்துபேர் மட்டும்தான் தேர்வு செய்யப்படுவார்கள்.

அதேவண்ணமாக, ஒரு திருமணத்திற்கு வருமாறு அநேகருக்கு அழைப்பிதழ் தருகிறோம். ஆனால், அழைப்பிதழ் பெற்ற எல்லோரும் திருமணத்திற்கு வருவது கிடையாது. வேதாகமத்திலே பார்த்தோமானால் கர்த்தர் அநேகரை அழைத்திருக்கிறார். இஸ்ரவேல் மக்களை வழிநடத்த மோசேயை அழைத்தார். இஸ்ரவேல் மக்களை நியாயம் விசாரிக்க இராஜாக்களை அழைத்தார். மக்கள் மற்றும் இராஜாக்களின் தவறுகளை உணர்த்துவதற்காக தீர்க்கதரிசிகளுக்கு அழைப்பு விடுத்தார். கிறிஸ்துவானவர் பிறந்த போது, முதன்முதலில் மேய்ப்பர்களுக்கு அழைப்புக் கொடுத்தார். தமக்கு நற்செய்தி பணியாளர்களாக விளங்க சீடர்களுக்கு அழைப்பு அருளினார். முன்பெல்லாம் குருவானவர் படிப்பிற்காக அநேக படிகளைத் தாண்டினால் தான் இடமே கிடைக்கும். கர்த்தருடைய அழைப்பு இல்லாமல் யாரும் சேர முடியாது. புறஜாதியாருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஆண்டவரால் அழைப்பு பெற்ற ஒரே மனிதன் அப்போஸ்தலராகிய பவுல். அழைப்பினால் எப்படி ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்கு அப். பவுலுக்கு ஈடாக வேறு யாரையும் ஒப்புமைப்படுத்தி பேசவோ/சொல்லவோ முடியாது.

### *ஆண்டவர் எப்படிப்பட்டவர்களுக்கு அழைப்பு விடுத்தார்?*

1. அறிவில் குறைந்தவர்கள் 2. தேவனுக்குப் பயந்தவர்கள் 3. அற்பமாய் எண்ணப்பட்டவர்கள் 4. வசதி இல்லாதவர்கள் 5. இழிவானவர்கள் இப்படிப்பட்டவர்களைத்தான் நம் ஆண்டவர் தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தார். படித்தவர்களையோ, பணக்காரர்களையோ, வசதி படைத்தவர்களையோ ஏன் ஆண்டவர் அழைப்பு கொடுக்காமல் இருந்தாரென்றால் தம்மோடு தம்முடைய ஊழியப் பாதையில் இவர்களால் எந்த பிரச்சனையும் வந்துவிடக் கூடாது, தங்களில் யார் உயர்ந்தவர்கள் / மேலானவர்கள் என்ற பாகுபாடு வந்துவிடக்கூடாது, மேலும் எல்லோருடைய மனநிலையும், கருத்துகளும் அநேக வேறுபாடுகளை தெரிவிக்கும் என்று நம் தேவன் நன்கு அறிந்திருந்தார். மேலும் அழைப்புப் பெறும் மக்கள் எந்த விஷயத்திலும் தாழ்ந்து போகுதல், விட்டுக் கொடுத்தல் ஆகியவற்றில் சிறப்பானவர்களாக இருக்க வேண்டும். இந்த தகுதியுள்ளவர்களுக்கே தேவன் அழைப்பு கொடுக்கிறார்.

ஆண்டவராகிய இயேசுவானவர் தமக்காக 12 சீடர்களை ஏற்படுத்தினார்.

பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா, பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனான யாக்கோபு, ததேயு (யூதா), கானானியனாகிய சீமோன், யூதாஸ் காரியோத்து (மாற்கு 3 : 16-19).

யூதாஸ் மற்றும் கானானியனாகிய சீமோன் இரண்டு பேரும் கலிலேயர்கள் கிடையாது. மற்ற பத்து பேரும் கலிலேயர்கள். ஆண்டவராகிய கிறிஸ்துவும் கலிலேயரே. அவரை அந்தப் பெயரை

வைத்து தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் ஒரு பாடலில் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

*"வானோர் தொழும் நாதனே,*
*மறையாகம போதனே*
*கானாவின் அதீதமே கலிலேய விநோதனே*
*ஞானாகரமே நடுநிலை யோவா*
*நண்பா, உனத நன்மையின் மகாதேவா."*

ஆண்டவரைப் போற்றிப் பாடும் பாடல்கள் எதை தெரிவிக்கின்றன என்றால், ஆண்டவர் நம்மீது கொண்டுள்ள அன்பு, இரக்கம், அவருடைய கிருபை இவைகளைப் பிரதிபலிக்கின்றன. கலிலேயா நாட்டைச் சுற்றிலும் கிறிஸ்துவினுடைய ஊழியம் அமைந்திருந்தக் காரணத்தினால் கலிலேயர் என்ற பெயர் பெற்றார்.

தமக்குப் பின் தம்முடைய சீடர்கள் நற்செய்திப் பணியாளர்களாக விளங்க வேண்டுமானால், அவர்கள் மற்றவர்களுக்கு எல்லா விதத்திலும் முன்மாதிரியாகவும், எளிமையான தோற்றம் கொண்டவர்களாயும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மீன் பிடித்தல் தொழிலைச் செய்பவர்களுக்கு அழைப்புக் கொடுத்தார். நம் ஆண்டவரோடு சேர்ந்து நற்பணியில் தங்களை இணைத்துக் கொண்ட காரணத்தால் எல்லா குணங்களிலும் சிறப்புப் பெற்றவர்களாக விளங்கினார்கள்.

ஆண்டவராகிய கிறிஸ்து விவிலியத்தில் எத்தனையோ பேருக்கு அழைப்பு கொடுத்திருக்கிறார். மத்தேயு 20-ஆம் அதிகாரத்தில் பரலோக ராஜ்யத்தைக் குறித்துப் பேசுகிறார். அதாவது ஒரு மனுஷன் தன்னுடைய திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்வதற்கு ஒரு நாளைக்கு ஒரு பணம் கூலி பேசி வேலைக்கு அமர்த்துகிறான். அதிகாலை (6 மணி) மூன்றாம் மணி (9 மணி), ஆறாம் மணி (12 மணி), ஒன்பதாம் மணி (3 மணி) 11 ஆம் மணி (மாலை 5 மணி) என்று யூதர்களின் கால அளவுப்படி எழுதப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் வித்தியாசத்தில் கூலிக்கு வேலையாட்கள் வந்து திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்தனர். இந்த ஐந்து காலக் கட்டங்களும் எதைக் குறிக்கிறதென்றால் நம் ஒவ்வொருவருடைய *வாழ்க்கையின் காலக் கட்டங்களான* இளமைப் பருவம், வாலிபப் பருவம், நடுத்தர வயது, முதிர் வயது, மறுபடியும் பிறக்கிறவர்கள். எல்லா வயதினரும் கர்த்தருடையப் பணியை ஏதேனும் ஒருவிதத்தில் செய்ய அழைப்புப் பெற்றவர்களே. நாம் எத்தனை ஆண்டுகள் நற்பணி செய்தோம் என்பது பெரிதல்ல. அழைக்கப்பட்ட நாளிலிருந்து இறுதிவரை கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து உண்மையாக உழைத்தோமா என்பதுதான் முக்கியம்.

இரண்டாவது, இந்த வேதப் பகுதியில் பார்ப்பது *முறுமுறுப்பு.* மாலை நேரத்தில் எஜமான் எல்லோருக்கும் சமமாக ஒரு பணம் கூலியைக் கொடுத்தான் அப்போது முந்தி வந்து வேலை செய்தவர்கள் முறுமுறுத்தனர். நாம் அதிகம் படித்தவர்களாக இருந்து நற்பணி செய்திருக்கலாம். ஆனால், நமக்குப் பின்பு நற்பணி/ஊழியத்திற்கு வந்தவர்கள் வாலிபர்களாகவோ, அறிவில்/படிப்பில் குறைந்தவர்களாகவோ இருந்தாலோ / கர்த்தர் நம்மை விட அதிகமாக உபயோகப்படுத்தினாலோ அதற்காக நாம் பொறாமை / முறுமுறுப்பு கொள்ளக் கூடாது. நமக்குக் கர்த்தர் கொடுத்த அழைப்பை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்து முடிப்பதே சிறப்பானதாகும். செல்வம், புகழ், செல்வாக்கு, பதவி இவைகள் மேல் நாட்டம் கொள்ளாமல், கிறிஸ்து நமக்காகப் பட்ட பாடுகளை மனதில் நினைத்து ஊழியம் செய்வோமானால் பரலோக இராஜ்யத்தில் அநேக வெகுமதிகளும், கிரீடங்களும் உண்டு என்பதில் சந்தேகம் வேண்டாம்.

*மூன்றாவது, அநியாயம் செய்யக்கூடாது*

*'உண்மையும், உத்தமமுமான ஊழியக்காரனே'* என்று கர்த்தரால் நாம் அழைக்கப்படுவதில் பெரும்பேறு பெற்றவர்களாகக் கருதி நாம் ஊழியம் செய்ய வேண்டும்.

*எஜமான் என்ன கூறினான்? "சிநேகிதனே, நான் உனக்கு அநியாயம்*

*செய்யவில்லை. நீ என்னிடத்தில் ஒரு பணத்திற்கு சம்மதிக்க வில்லையா? ... பிந்தி வந்தவனான இவனுக்கும் கொடுப்பது என் இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா'' என்றான்* (மத். 20 : 13-15).

உண்மையான ஊழியர் யாரென்று பார்த்தால் தனக்குக் கீழே பணிபுரியும் சிறிய ஊழியர்கள் நல்ல பேரும் புகழும் அடைந்தால் அதைக் கண்டு சந்தோஷப்பட வேண்டும். நம்மைவிட ஊழியத்தில் அதிகமாக நற்பணி செய்தால் அதற்காக நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். அவர்களுடைய முன்னேற்றத்திற்கு நாம் எந்த ஒரு இடையூறாகவோ அநியாயமாகவோ எந்த பழியையும் போடக்கூடாது.

கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளில் தன்னைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் வந்தபோது, என்ன சொல்லி அழைத்தார் என்று பார்த்தால், 'சிநேகிதனே!' (மத். 26 : 50). ஆண்டவருடைய ஊழியத்திலே தம்முடைய சீடர்களை எப்படி அழைத்தாரோ அதிலே எந்த மாற்றமும் இல்லாமல் இறுதிவரை அதேபோல் அழைத்த வேறொரு கடவுளை நாம் காண முடியாது. காரணம் நம் எல்லோருக்கும் தேவன் ஒருவரே, கர்த்தருக்கு ஒப்பானவர் வேறு யாரும் இல்லை. அழைக்கப்பட்டவர்களோ அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர். ***The last shall be first, and the first last: for many be called. But few chosen (Mathew 20 : 16).***

விவிலியத்திலிருந்து எப்பேர்ப்பட்ட மூன்று பேர்களை அழைத்தார் என்று பார்க்கலாம்.

1. ஒதுக்கப்பட்டவர்களுக்கு அழைப்பு.

2. காத்திருந்தவர்களுக்கு அழைப்பு.

3. (தேவனுக்குப் பயந்த) புறஜாதியானுக்கு அழைப்பு.

மேலே உள்ள மூன்று தலைப்பில் வரும் மனிதர்கள் நமக்கு நன்கு அறிமுக-மானவர்கள்தான். எந்த சூழ்நிலையில் எப்படிப்பட்ட இடத்தில், எந்த நேரத்தில் நம் ஆண்டவர் அழைப்பு விடுத்தார் என்று பார்க்கலாம்.

*1. ஒதுக்கப்பட்டவர்களுக்கு அழைப்பு:*

ஒதுக்கப்பட்டவர்கள் என்பதற்கு வேறு அநேக வார்த்தைகள் உள்ளன. அற்பமாய் எண்ணப்படுபவர்கள், முக்கியத்துவம் இல்லாதவர்கள், முன்னிலைப் படுத்தப்படாதவர்கள், மிகவும் கீழாக பார்க்கப்படுபவர்கள் என்பன.

*ஒதுக்கப்பட்ட குஷ்டரோகிகள்:*

*இயேசு ஐயரே! எங்களுக்கு இரங்கும் என்று பத்து குஷ்டரோகிகளும் உரத்த சத்தமிட்டார்கள் (லூக். 17 : 13).*

***They lifted up their voices, and said, Jesus, Master, have mercy on us (Luke 17 : 13).***

இயேசுவானவர் உடனே, உங்களுக்கு சுகம் கொடுத்தேன், நீங்கள் போகலாம் என்று சொல்லவில்லை. மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு / கட்டளைக்கு கீழ்ப்படிந்து நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். ஆசாரியனிடமிருந்து தோல் நோயிலிருந்து சுத்தமாகி விட்டனர் என்ற நற்சான்றிதழ் பெற்றால்தான், நாட்டிற்குள்ளே போய் தன்னுடைய குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்களோடு உறவாட முடியும். ஒதுக்கப்பட்ட குஷ்டரோகிகளை நம் ஆண்டவர் சந்தித்து புது வாழ்வு தந்தார்.

*ஒதுக்கப்பட்ட மேய்ப்பர்களுக்கு அழைப்பு:*

*இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கின்றார் (லூக். 2 : 11).*

மேய்ப்பர்கள் யூதர்கள் தான். ஆனால், சமுதாயத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள்.

சமுதாயத்தில் எந்த ஒரு மதிப்பும் கிடையாது. இரவும், பகலும் மந்தையை மேய்ப்பதும், கண் விழித்து கண்காணிப்பதுமே மேய்ப்பர்களின் வேலை. தங்களுக்கென்று எந்தவொரு சந்தோஷத்தையும் காணாதவர்கள். தூக்கம் என்பது அவர்கள் வாழ்க்கையில் கிடையாது. எளிமையான ஆடையை அணிந்து மந்தையைப் பாதுகாத்து வந்தனர். மேய்ப்பர்களின் கஷ்டத்தை ஜனங்கள் எவருமே கண்டு கொள்ளவில்லை.

ஆனால், தேவன் அவர்களுக்கு பாதுகாப்பாளராகவும், அக்கரை கொண்டவராகவும் இருந்தார். தன்னுடைய ஒரே பேரானக் குமாரன் கிறிஸ்துவானவர் பெத்லகேமில் பிறந்த போது தேவன் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். உலகத்தைப் படைத்த சிருஷ்டிகர்த்தாவான எஜமான் இந்தச் செய்தியை முதலில் யாருக்குத் தெரிவித்தால் விரைவாக அது நற்செய்தியாக மாறும் என்று யோசித்தார். விழித்திருப்பவர்களுக்கு முதலில் முக்கியத்துவத்தைக் கொடுத்து அழைப்புக் கொடுத்தார்.

<u>*மேய்ப்பர்களின் நற்பண்புகள் என்னென்ன?*</u>

*. . . வயல் வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள் லூக். 2 : 8.*

***...They were in the same country shepherds abiding in the field, keeping watch over their flock by night (Luke 2 : 8).***

தங்கள் கடமைகளில் கருத்தாயிருந்தார்கள். தேவ தூதர்களால் சொல்லப்பட்டவற்றை நம்பினார்கள். இரட்சகரைப் பார்க்க ஆவல் கொண்டார்கள். எல்லோரும் ஆலோசனை பண்ணி விரைவாக முடிவெடுத்தார்கள். உடனடியாக செயலில் இறங்கினார்கள். *''தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்'' (லூக் 2 : 16).*

***"And they came with haste, and found Mary and Joseph and the babe lying in a Manger" (Luke 2 : 16).***

குழந்தையைக் கண்டு மற்றவர்களுக்கு சாட்சி கூறினார்கள். தேவனைத் துதித்தார்கள். தங்கள் இருப்பிடத்துக்குப் போய் வேலைக்குத் திரும்பினார்கள். குழந்தையாகிய இயேசுவை - மரியாள், யோசேப்புக்கு அடுத்ததாக பார்த்தவர்கள் மேய்ப்பர்கள் தான். இரவோடு இரவாக மேய்ப்பர்கள் நடந்து சென்று தேவ பாலகனைக் கண்டு திரும்பினார்கள். ஏரோது ராஜாவின் அரண்மனை ஜனங்களின் கண்களிலோ, வேறு யாருடைய கண்ணிலும் அகப்படாமல் வந்து போனது தேவனுடைய கிருபை, அன்பு மற்றும் செயல், திட்டம்.

ஒன்றை மட்டும் மனிதர்களான நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். ஒதுக்கப்பட்டவர்கள், அற்பமாய் எண்ணப்பட்டவர்கள் எல்லாம் எப்போதும் அதே நிலையில்தான் இருப்பார்கள் என்று ஒரு நாளும் நினைக்கக் கூடாது.

*''வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.''* (மத்தேயு 21 : 42, சங். 118 : 22, 23, மாற்கு 12 : 10, 11, லூக்கா 20 : 17).

வீடு கட்டுபவன் அரைக்கல் (செங்கல்) முக்கால் கல் இவைகளையெல்லாம் ஒரு பக்கமாக ஒதுக்கி குவித்து வைத்திருப்பான். மேலே உள்ள இந்த வசனமானது மூன்று சுவிசேஷ பகுதியிலும் அப். நடபடிகள் 4 : 11-லும் நாம் வாசிக்கிறோம். இந்த வசனமானது நம் ஆண்டவராகிய கிறிஸ்துவைக் குறிக்கிறது. ஆகாதவர் என்று யூதர்களால் ஒதுக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட கிறிஸ்துவை தேவன் சபைக்கும், வானத்துக்கும், பூமிக்கும் தலைமையாக்கி உயிர்த்தெழச் செய்தார்.

ஆகாதென்று ஒதுக்கின கல்லே மூலைக்கு தலைக்கல் ஆயிற்று என்றால் மூலைக்கல் என்பது இரண்டு சுவர்களை இணைக்கும் இடம்.

யூதர்களையும், புறஜாதியானரையும் கிறிஸ்துவானவர் அழைப்பு விடுத்து இணைத்தார்.

உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர் பரலோகத்தில் நம் எல்லோருக்காகவும் பிதாவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். கர்த்தரின் பார்வையில் ஒதுக்கப்பட்டவர்கள் என்ற பிரிவினையோ / வேறுபாடோ கிடையாது.

*2. காத்திருந்தவர்களுக்கு அழைப்பு :*

விவிலியத்திலே கர்த்தரிடம் அநேகக் காரியங்களுக்காகக் காத்திருந்தனர். வேதாகமத்திலே மூன்று பெண்களைப் பற்றிய (சிறிய நூல்) சிறிய புத்தகங்களும், குறிப்புகளும் இருக்கின்றன. ரூத், அன்னாள், எஸ்தர் மிகச் சிறந்த பெண்களாக காணப்படுகிறார்கள்.

வாலிப வயதில் விதவையான ரூத் தன் கண்ணும், மனமும்போன போக்கில் பாதை மாறிப்போய் வாழாமல், தன் மாமியாரான நகோமியின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து, எல்லாக் காரியத்திலும் தன் மாமியாரின் வழிநடத்துதலில் சார்ந்து, இஸ்ரவேலின் பிரபுவாகிய போவாஸுக்கு தன்னைக் கரம் பிடித்துக் கொடுத்த விதவையான நகோமியின் வயோதிக காலத்திலே பேரப் பிள்ளையைக் காணாமல் காத்திருந்த தன் மாமியாருக்கும், எந்த ஒரு குழந்தை பாக்கியமும் இல்லாமல் நகோமியின் தேவன் என்னுடைய தேவன் என்று கூறி கர்த்தருக்காகக் *காத்திருந்த* ரூத்துக்கு போவாஸ் மூலமாக ஓபேத் என்ற மகனைக் கொடுத்து, சந்தோஷத்தினாலும், மகிழ்ச்சியினாலும் முடி சூட்டியவர் நம் தேவாதி தேவன்.

தனக்கு ஒரு குழந்தையில்லையே என்று *அன்னாள்* சீலோவிலுள்ள ஆலயத்திற்குச் சென்று கர்த்தரிடம் ஜெபித்து, ஒரு பொருத்தனை பண்ணின தேவ பக்தியுள்ள பெண். தன் இருதயத்தின் மனக்கிலேசத்தை மகிழ்ச்சியாக மாற்றும் வல்லமை, இஸ்ரவேலின் தேவனைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்று நன்கு அறிந்தவள். உலகம் போற்றும் ஒரு தீர்க்கதரிசியை தனக்குத் தேவன் நிச்சயமாகத் தருவார் என்ற நம்பிக்கையோடு *காத்திருந்த* மிகப்பெரும் விசுவாசி அன்னாள் (எல்க்கானாவின் மனைவி).

ஒரு ஆயக்காரன் ஆண்டவருக்காக எப்படிக் காத்திருந்தான், அந்த ஆயக்காரனை கர்த்தர் எப்படி அழைத்தார் என்று லூக்கா 19-ஆம் அதிகாரத்தில் காணலாம்.

*யார் அந்த ஆயக்காரன்?*

எரிகோவில் வாழ்ந்து வந்த சகேயு என்னும் ஆயக்காரர்களுக்குத் தலைவன், குள்ளன், செல்வந்தனான யூதன்; ஆபிரகாமுக்குக் குமாரன்.

***...There was a man named Zacchaeus. He was the chief among the publicans and he was rich, and also he was little of stature" (Luke 19 : 2,3)***

இயேசுவானவர் செய்த அற்புதங்களையும், அதிசயங்களையும் கேள்விப்பட்டிருந்த *சகேயு* இயேசுவை நேரிடையாகக் காண அதிக ஆவல் கொண்டான். நன்மையானவற்றையும், நல்ல மனதுள்ளவர்களையும் காண விரும்பும் சகேயு தன்னுடைய ஊருக்கு (எரிகோ) இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று அறிந்து, எப்படியாவது இயேசுவைக் காணத் தீர்மானித்தான். எரிகோ பட்டணத்தில் ஒருவர் கூட தன்னை நேசிக்காத சூழ்நிலையில் எப்படி இயேசுவைக் காண்பது என்று மனதில் சங்கடப்பட்டிருப்பான். மக்களோடு மக்களாகக் கலந்து முன்னாக ஓடிப் பார்க்கலாம் என்றுகூட நினைத்திருப்பான். அப்படிப்போனால் கூட்டம் எல்லாம் ஒன்று சேர்ந்து இயேசுவிடம் தன்னைப்பற்றி அநேக குற்றச்சாட்டுக்களை கூறுவர் என்று நினைத்து, தன்னுடைய குள்ளமான உருவத்தை நினைத்து கூட்டமானது வருவதற்குள் முன்னாக *ஓடி ஒரு அத்தி மரத்தில் ஏறினான்.*

செல்வந்தனாகவும், தலைவனாகவும் உள்ள எந்த ஒரு மனிதனும் இவ்வாறு ஒரு மரத்தில் ஏறமாட்டான். ஆண்டவருடைய அழைப்பு சகேயு மேல் உள்ளது என்பதை சகேயு அறியவில்லை.

ஆண்டவராகிய இயேசு, தான் ஏறி அமர்ந்திருந்த அத்திமரத்தை நோக்கி நடந்து நெருங்கி வருகையில் சகேயு இயேசுவை கீழ்நோக்கி முழுமையாகப் பார்த்தான். அளவில்லா ஆனந்தத்தின் எல்லைக்கே சென்றிருப்பான். அதுவரை ஆண்டவராகிய கிறிஸ்து சகேயுவை பார்த்தது கிடையாது. ஆனால், இயேசு அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்று அழைத்தார். சிறிது நேரம் சகேயுவுக்கு ஒன்றுமே விளங்கியிருக்காது. நடப்பது எல்லாம் உண்மைதானா என்று இயேசுவைக் காண காத்திருந்த சகேயுவுக்குத் தோன்றியது. ஆண்டவரோடு சமமாக நடந்து சென்றான். பேசிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான். அவனுடைய வீட்டை இரட்சிப்பின் இல்லமாக மாற்றினார் கிறிஸ்து.

*“பாவியை ஒரு போதும் தள்ளாத நேசர்*
*வா என்று உன்னை அழைக்கிறாரே”*

நம் எல்லோருடைய வீடும் இரட்சிப்பின் இல்லமாக மாற வேண்டுமானால் ஆண்டவரை நாம் தேட வாஞ்சை உள்ளவர்களாக ஓட வேண்டும்.

1. மகதலேனா, கல்லறைத் தோட்டத்தில் ஆண்டவரைக் காண ஓடினாள். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவினால் மரியாளே என்று *அழைப்பு* பெற்றாள்.

2. அப். பவுல் புறஜாதியாருக்கு நற்செய்தி-யாளனாயிருக்க கிறிஸ்துவால் *அழைப்புப்* பெற்ற மகாபெரிய தேவ ஊழியன். *ஓடின தூரத்தை அளவிட முடியாது.*

3. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மூன்று பேரும் தேவனால் *அழைப்புப்* பெற்று முற்பிதாக்களானவர்கள்.

4. வேதாகமத்தை எழுதிய (66 புத்தகங்கள்) அனைத்து இராஜாக்களும், தீர்க்கதரிசிகளும், கர்த்தரிடம் *காத்திருந்து அழைப்புப் பெற்றவர்கள்.*

*3. புறஜாதியானுக்கு அழைப்பு*

*...ஆண்டவரே! நீர் என் வீட்டிற்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் (மத். 8 : 8, லூக். 7 : 6,7).*

வேதாகமத்தில் நூற்றுக்கு அதிபதியைக் குறித்து மூன்று இடத்தில் காணலாம். மத்தேயு 8, லூக்கா 7, அப். 10. இந்த வேதாகமப் பகுதியிலே மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷத்தில் வரும் நூற்றுக்கு அதிபதி ஒரே மனிதர்தான். கப்பர் நகூமிலே நடந்த உண்மைச் சம்பவம்.

வேதத்திலே - கிறிஸ்துவை *ஆண்டவரே* என்று குருடர்கள் கானானியப் பெண் எல்லாம் அழைத்திருக்கிறார்கள். ஆனால், நூற்றுக்கு அதிபதி மட்டும் *ஆண்டவரே!* என்று அழைக்கும் இடத்தில் ஒரு ஆச்சரியக்குறி வேதத்திலே போட்டிருப்பதைப் பாருங்கள்!! நூறு போர்ச் சேவர்களுக்குத் தலைவன் (அதிபதி) அவன் ஒரு ரோமன்; புறஜாதியான். அவன் தன்னுடைய அந்தஸ்து எப்படிப்பட்டது என்று கிறிஸ்துவிடம் கூறுகிறான். தாழ்மையுடன் எடுத்துரைக்கிறான். தனது அடிமையையும் (வேலைக்காரன்) மகன் போல நேசித்த நூறு போர்ச் சேவகர்களுக்கு அதிபதி/தலைவனானவன் *ஆண்டவரே!* என்று கிறிஸ்துவை அழைத்ததைக் கேட்டு கர்த்தர் ஆச்சரியப்பட்டார். காரணம், ரோமர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் ஒரு யூதனை நாடிச் செல்லவோ, பேசவோ, உறவு கொண்டு உறவாட மாட்டார்கள். அப்பேர்ப்பட்ட ரோமன் தன் மீது எவ்வளவு நம்பிக்கைக் கொண்டிருக்கிறான் என்று நினைத்துப் பார்க்கிறார் கிறிஸ்து. தனக்கு இருக்கும் அதிகாரத்தைவிட நூறுமடங்கு ஆண்டவரின் சொல்லுக்கு அதிகாரம் உண்டு என்று விசுவாசித்தான்.

*நூற்றுக்கு அதிபதியின் நம்பிக்கை என்ன?*

தனக்கு கீழ்ப்பட்டிருக்கிற சேவகன் தன் சொற்படி தவறாமல் செய்வது போல கிறிஸ்துவின் சொல்லுக்கும் என் வேலைக்காரனின் சரீரத்தில் வந்திருக்கும் வியாதியும் கீழ்ப்படியும் என்பது

நூற்றுக்கு அதிபதியின் நம்பிக்கையாகும். எல்லாவற்றின் மேலும் கிறிஸ்துவுக்கு அதிகாரம் உண்டு என்பதை முழுமையாக நம்பினான். கப்பர் நகூமிலே நூற்றுக்கு அதிபதி ஒரு சாட்சியாக விளங்கினான்.

*இயேசுவானவர் என்ன சொன்னார்?*

*''நான் வந்து அவனை சொஸ்த-மாக்குவேன்''* - 7வது வசனம்.

ஆண்டவராகிய கிறிஸ்து ஒருவருடைய வீட்டிற்கு வருகிறேன் என்று அழைப்பு கொடுத்தால் அதைவிட பெரிய சந்தோஷம் / மகிழ்ச்சி வேறு எதுவும் இல்லை. ஆனால், நூற்றுக்கு அதிபதி தன்னுடைய வீட்டிற்கு இயேசு கிறிஸ்துவை வரவேண்டாம் என்று சொல்லவில்லை. தான் அதற்கு எவ்விதத்திலும் தகுதியில்லாதவன் என்று தாழ்மையாய் பதிலுரைக்கிறான். ஊழியக்காரர்-களுக்கு இருக்க வேண்டிய முதல் நற்குணம் தாழ்மை.

கானானியப் பெண்ணிடம் (மத். 15 : 24) இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பட்டேனேயன்றி மற்றபடி அல்லவென்றார். மத். 8 : 10-இல் நூற்றுக்கு அதிபதியின் தாழ்மையான பேச்சையும், நம்பிக்கையையும், ஆண்டவர் பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தையும் பார்த்து தமக்குப் பின் செல்பவர்களை நோக்கி : இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் மக்களை விட புறஜாதியார் தம்மீது எவ்வளவு விசுவாசமும், நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள் என்று எண்ணி நீ போகலாம், உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது என்றார். *ஆண்டவரே!* என்று புறஜாதியான் அழைத்த அழைப்புக்கு கிறிஸ்துவானவர் அவனை வாழ்த்தி அனுப்புகிறார்.

*கொர்நேலியு யார்?*

தேவ பக்தி உள்ளவனும், தேவனுக்கு பயந்தவன், ஏழைகளுக்கு தான தர்மங்கள் செய்பவன், எப்போதும் ஜெபம் செய்து கொண்டிருந்தவன். அதோடு மட்டுமல்லாமல் இராணுவத்தில் நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். அவனுடைய இருப்பிடம் செசரியா பட்டணம்.

ஒருநாள் மதியம் மூன்று மணிக்கு (9 ஆம் மணி) கொர்நேலியுவே என்று அழைக்கும் சத்தம் கேட்டு *அவனை உற்றுப்பார்த்து, பயந்து : ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன் : உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது (அப்போஸ்தலர் 10 : 4).*

கொர்நேலியுவை பெயர் சொல்லி அழைத்த தேவன் நம்முடைய பெயர், செயல்கள், முகவரி எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். கொர்நேலியு ஒரு புறஜாதியான் (ரோமன்) ஆனால், தான் எப்படி தேவனுக்கு பயந்து வாழ்கிறாரோ அதேபோல் தன் குடும்பமும், உறவினர்களும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் பக்தியோடு வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் கொர்நேலியு.

இப்படிப்பட்ட தேவ மனிதனைப் போய் பார்க்க பேதுருவை அனுப்ப தேவன் விரும்பினார். பேதுருவோ யூதன், புறஜாதியான் வீட்டிற்குச் செல்வது யூதனுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. யூதர்களும், யூதரல்லாதோரும் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் என்பதைப் பேதுருவுக்கு அறிவிப்பதற்காக சுத்தமுள்ள விலங்குகளும், சுத்தமில்லாத விலங்குகளும் தேவனால் காட்டப்பட்டது. இறுதியில் பேதுரு கொர்நேலியு வீட்டிற்குப் போய் தான் எதற்காகக் கர்த்தரால் அழைப்புப் பெற்றாரோ அதை நிறைவேற்றும் வண்ணமாக *தேவன் பட்சபாதமுள்ளவரல்ல* என்றும் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டு இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் யாவருக்கும் இயேசு இரட்சிப்பு அருளுகிறார். விசுவாசத்துடன் கேட்கும் யாவருக்கும் சுகம், விடுதலை, வழிநடத்துதல், ஊழிய அழைப்பு, வெற்றி போன்ற எல்லாம் தருகிறார். மற்றவர்களுக்கு அளித்த அழைப்பை நமக்கும் தருவார், இன்றைக்கேத் தருவார்.

எருசலேம் அலங்கத்தைக் கட்டுவதற்கு நெகேமியாவுக்கு அழைப்பு வந்த போது நெகேமியாவின் முகம் துக்கமுகமாய் மாறியது. அர்த்த சஷ்டா ராஜாவிடம் தனக்கு வேண்டிய சகல உதவிகளையும் பெற்று, தேவன் அழைத்த அழைப்பை ஏற்று, ஜெபித்து செயல்வீரராகவும் வாழ்ந்து 52 நாட்களில் எருசலேமின் மதில்சுவரை, மக்களின் ஒத்துழைப்புடன் கட்டி முடித்த செயல்வீரர். கர்த்தர் நம்மை எப்போது வேண்டுமானாலும் அழைப்பார். கர்த்தருக்கென்று வேலை செய்ய ஆயத்தமாக காணப்படுவோமாக.

கர்த்தர் யாரையும் ஒதுக்குகிறவர் அல்ல. எல்லோரையும் நேசிக்கிற ஒரே தேவன் நம் ஆண்டவர். எல்லோருடைய மீட்புக்காகவும், இரட்சிப்புக்காகவும் பிதாவினுடைய அழைப்பை ஏற்று கல்வாரி வரைச் சென்றார். அப்பேர்ப்பட்டத் தேவன் ஏழை, செல்வந்தன், தாழ்மையோ–டிருப்பவன் எல்லோரையும் நேசிக்கிறார். இந்த சீர்கெட்ட உலக சமுதாயமான நாம்தான் மனிதர்களை பிரித்துப் பார்க்கிறோம், ஒதுக்கி வைக்கிறோம். இனியாவது மனம் மாறி எல்லோரையும் நேசிக்கும் ஆத்துமாக்களாக வாழ முற்படுவோம்.

காத்திருத்தல் என்பது ஒரு வருடமோ, இரண்டு வருடகாலம் கிடையாது. அநேக காலங்கள் காத்திருந்து கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சுகம், மகிழ்ச்சி, சந்தோஷம் அலாதியானது. நாம் பாடுபடாமல் ஒரு பெரிய பொருள் கிடைத்தால் அதின் மகிமை என்னவென்று நம்மால் அறியமுடியாது.

*கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமானதாயிருந்து, கார்த்தருக்கே காத்திரு (சங். 27:14).*

யாக்கோபு ஏசாவோடு சமாதானமாக 20 வருடங்கள் காத்திருந்தார். ஈசாக்கு தன் மகன்களைக் காண 20 வருடங்கள் காத்திருந்தார். ஆதி. 41:46 யோசேப்பு எகிப்திலே உயர்த்தப்பட 30 வயது வரை காத்திருந்தான். 2 சாமு. 5 : 4 தாவீது எருசலேமில் ராஜாவாக 30 வயது வரை காத்திருந்தான். ஆபிரகாம் ஈசாக்கைக் காண 100 வயது வரை காத்திருந்தான். மோசே இஸ்ரவேல் மக்களை கானானில் சேர்க்க 120 வருடம் காத்திருந்தான்.

காத்திருத்தல் கடினம் தான். ஆனால், அது மரமாகி கனி கொடுக்கும் போது அதின் ருசி அருமையோ அருமை.

இறுதியாக பார்க்கப் போவது, புறஜாதி மக்களையும் நாம் நேசிக்க வேண்டும். அவர்களுடைய செயல்களுக்கும், எண்ணங்களுக்கும் நாம் மதிப்பு கொடுக்க வேண்டும். நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்தின் ராஜா. கல்தேயன். ஆனால், எரேமியா 25 : 9, 27 : 6-லே என்னுடைய ஊழியக்காரன் என்று கர்த்தர் கூறுகிறார்.

*''மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும் இராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருளை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார்''.* ஒரு புறஜாதியான் தன்னை எல்லோரும் வணங்க வேண்டும் என்று கட்டளை போட்டவன் உண்மையான தேவனைக் கண்டு கொண்டான். தானி 2 : 47, 3 : 29, இந்த வசனங்களிலே பரலோக தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தித் துதித்ததினால் தம்முடைய ஊழியக்காரன் என்று அழைக்கும் பாக்கியம் பெற்றார்.

நாமும் ஆண்டவருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி மேய்ப்பர்களைப் போல் விழித்திருப்போம். காத்திருந்து ஆசீர்வாத மழையை பெற்றுக் கொள்வோம். ஜாதி, மதம், இனம் பார்க்காமல் யாவர் மேலும் அன்பு கொள்வோம். ஆண்டவர் நம்மை அழைத்த அழைப்பு என்னவென்று அறிந்து அதன்படி செயல்வீரர்களாவோம்.

ஆமென்!

God Bless You!

கர்த்தரின் பணியில்,

*சகோதரி. பேர்ல் குயிலி ராஜா*

# IBT-இன் நிகழ்வுகள்



12.12.2024 அன்று IBT மையத்தில் நடைபெற்ற
கிறிஸ்துமஸ் நிகழ்வுகளை நடத்தும்
திரு. M. ஜான் வில்லியம் அவர்கள்.



கிறிஸ்துமஸ் நிகழ்வில்
வேத பாடம் வாசிக்கும் திருமதி. நவமணி சேகர்
அவர்கள்.



வேத வினா கேள்விகள் கேட்கும்
திரு. S. தீமோத்தி அவர்கள்.



Rev. ஜான்ராஜா ஐயா அவர்கள் பரிசு கொடுக்க
மொழிபெயர்ப்பாளர் சகோ. பீதாம்பர் பெறுகிறார்.



தேவ செய்தியளித்தபின் இனிய பாடல்கள் பாடி
அனைவரையும் மகிழ்விக்கும்
Rev. ஜான்ராஜா அவர்கள்.



முடிவு ஜெபத்தை ஏறெடுக்கும்
திருமதி. குயிலிராஜா அவர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



12.12.2024 அன்று IBT மையத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் ஒடியா பாடல் பாடும் மொழிபெயர்ப்பாளர்கள்.



18.12.2024 அன்று கோவையிலுள்ள "Second Chance" மனநலம் குன்றிய சிறுவர் இல்லத்தில் தேவ செய்தியளிக்கும் Rev. ராபர்ட் ராஜா அவர்கள்.



"Second Chance" இல்ல சிறுவர்களுடன் அந்நிறுவனர், காப்பாளர்கள் மற்றும் IBT பிரதிநிதிகள்.



"Second Chance" இல்லத்தில் மதிய உணவு சாப்பிடும் சிறுவர்கள்.



15.12.2024 அன்று ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர் இல்லப்பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள்.



15.12.2024 அன்று மதிய உணவு சாப்பிடும் சிறுவர் இல்லப் பிள்ளைகள்.

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்களின் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்'' (1 சாமு. 15 : 22).*

இந்த உலகத்தில் மனிதன் செய்த முதல் பாவமே கீழ்ப்படியாமைதான். தேவனாகிய கர்த்தர் மனுஷருக்கு கொடுத்த முதலாவது கட்டளையே, ஏதேன் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம். ஆனால், நன்மை தீமை அறியத்தக்க அந்தக் கனியை புசிக்க வேண்டாம் என்றார். ஆனால், சர்பத்தின் வஞ்சனையாலும், அந்தக் கனி பார்வைக்கு இன்பமும், இச்சிக்கப்படத் தக்கதாயும் இருந்ததால் தேவனுடைய கட்டளையை மீறினார்கள். அதினிமித்தம் ஆசீர்வாதமான ஏதேன் தோட்டத்தை இழந்து சாபத்திற்குள்ளானார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களை ஆள தேவன் ஏற்படுத்தின முதலாவது ராஜா சவுல். சவுல் ராஜ்யபாரம் பண்ணின இரண்டாம் வருஷத்தில் பெலிஸ்தியர் இஸ்ரவேலுக்கு விரோதமாக படையெடுத்து வந்தார்கள். சவுல், சாமுவேல் தனக்கு குறித்த ஏழுநாள் மட்டும் கில்காலிலே காத்திருந்தான். சாமுவேல் வர தாமதமானதாலும், ஜனங்கள் சவுலை விட்டு சிதறிப் போனதாலும், பெலிஸ்தர் வந்து விடுவார்கள் என்று பயந்து, ஆசாரியர்கள் மாத்திரமே செலுத்தும் சர்வாங்க தகன பலியை சவுல் செலுத்தி, கர்த்தரின் கட்டளையை மீறினான்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து வந்த போது, அவர்களை வழிமறித்ததினிமித்தம் அமலேக்கியரையும் அவர்களுடைய மிருக ஜீவன்களையும் அவர்களுடைய எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் அழிக்கும்படி சவுலுக்கு கட்டளையிட்டார். ஆனால், சவுலும் ஜனங்களும் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்படியாமல், ஆடு மாடுகளின் நலமானவற்றை அழிக்க மனதில்லாமல் அதை எடுத்துக் கொண்டு, அற்பமானவைகளை மாத்திரமே அழித்துப் போட்டார்கள். அமலேக்கிய ராஜாவையும் அழிக்கவில்லை, கீழ்ப்படியாமையினிமித்தம் சவுல் தன்னுடைய ராஜ்யபாரத்தை இழந்தான்.

நோவாவின் காலத்திலே வாழ்ந்தவர்களில், நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். ஜனத்தின் மிகுதியான பாவங்களினிமித்தம் பூமியிலுள்ள ஜீவன்களை ஜலத்தினால் அழிக்க தேவன் சித்தமானார். நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்ற ஒரு பேழையை உண்டாக்கச் சொன்னார். அதுவரை மழையையே பார்த்திராத நோவா, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து பேழையை உண்டாக்கி அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டான். கர்த்தர், ஆபிரகாமுக்குப் பிறந்த முதல் பிள்ளையான இஸ்மவேலையும், ஆகாரையும் அவனைவிட்டு அனுப்பிவிடச் சொன்னார். ஆபிரகாம் அதற்குக் கீழ்ப்படிந்தான். தன்னுடைய 100-வது வயதில் பிறந்த ஈசாக்கை தகன பலியாக ஒப்புக் கொடுக்கச் சொன்னார். அதற்கும் கீழ்ப்படிந்து, ஈசாக்கை பலியிட தேவன் தனக்கு குறித்த இடத்திற்கு கூட்டிச் சென்றான். இதினிமித்தம் ஆபிரகாம் சகல இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தகப்பன் என்றும், விசுவாசத்தின் தகப்பன் என்றும் அழைக்கப்படுகிறார்.

இயேசு கிறிஸ்துவும் மனுகுலத்தின் பாவங்களை போக்கவும், நம்மை மீட்கவும் பிதாவின் கட்டளைக்குக் கீழ்படிந்து சிலுவையில் தன்னையே பாவ நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்.

*''ஒரே மனுஷனுடைய (ஆதாம்) கீழ்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய (இயேசு கிறிஸ்து) கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்'' (ரோமர் 5:19).*

கடந்த டிசம்பர் மாதம் 12-ஆம் தேதியன்று கோவை, IBT மையத்தில் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. IBT பொருளாளர் திரு. M. ஜான் வில்லியம் அவர்கள் ஆரம்ப ஜெபத்தை ஏறெடுத்து வந்திருந்த அனைவரையும் வரவேற்று நிகழ்வுகளை நடத்தினார். இதில் ஒடிஷா, சட்டிஷ்கார், கர்நாடகா மாநிலங்களிலிருந்து இங்கு வந்து பணிகளைச் செய்து வந்த 8 மொழிபெயர்ப்பாளர்களும் கலந்து கொண்டார்கள். வேத பாடத்தை திருமதி. நவமணி சேகர் அவர்கள் வாசிக்க, Rev. ஜான்ராஜா ஐயா அவர்கள் தேவ செய்தியளித்து, கிட்டார் இசையை மீட்டபடி ஹிந்தி மொழியிலும், தமிழ் மொழியிலும் 2 பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வுறச் செய்தார். சத்திய வார்த்தைப் பத்திரிகைக்கு செய்தி எழுதிவரும் திருமதி. குயிலிராஜா அவர்களும், திரு. ஜாண்சேகர் அவர்களும், திருமதி. நவமணி அவர்களுடன் அலுவலக ஊழியர்கள், இரு முன்னேற்றப் பணியாளர்களும் பங்கு பெற்றார்கள். IBT-இன் முன்னாள் தலைவர், திரு. எஸ். தீமோத்தி அவர்கள் வேத வினா கேட்டு, பங்குபெற்ற 25 பேருக்கும் பரிசுகள் வழங்கி, மகிழ்ச்சியடையச் செய்தார். மொழி பெயர்ப்பாளர்கள் ஒடியா மொழியில் ஒரு பாடலும் அலுவலர் ஊழியர்கள் ஒரு பாடலும் பாடினார்கள். திரு. ஜாண்சேகர் அவர்கள் நன்றி உரை கூறினார். திருமதி. குயிலிராஜா அவர்கள் முடிவு ஜெபம் ஏறெடுத்து, Rev. ஜான்ராஜா அவர்கள் ஆசீர்வாதம் ஜெபம் செய்ய நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது. பங்குபெற்ற அனைவருக்கும் காபி, Snacks வழங்கப்பட்டது.

இதே மாதம் 15-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்வுகள் கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ச்சி, சிறப்புப் பாடல்கள், நடன நிகழ்ச்சிகளை பிள்ளைகள் சிறப்பாகச் செய்தார்கள். மதியம் பிரியாணி வழங்கப்பட்டது. மாலையில் தேநீர் விருந்தும் கொடுக்கப்பட்டது. அந்நாளில் இல்லப் பிள்ளைகள் மிகுந்த உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் ஈடுபட்டு தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். பிள்ளைகளுக்கு மட்டுமின்றி, அங்குள்ள மிஷனெரிகளுக்கும் இந்நாள் ஆசீர்வாதமான நாளாக அமைந்தது.

இதே மாதம் 18-ஆம் தேதியன்று கோவை, V.G. ராவ் நகரிலுள்ள "Second Chance" Rehabilitation Centre for Mentally Challenged Boys Home-ற்கு கோவையிலுள்ள சில பிரதிநிதிகள் IBT பொருளாளருடன் சென்று அங்கு தங்கியுள்ள மனநிலை பாதிப்படைந்த 16 சிறுவர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள், இந்த அமைப்பின் நிறுவனர் Mrs. Rethcy Ralph அவர்களுடன் கிறிஸ்துமஸ் பாடல்கள் பாடி, அவர்களுக்காக ஜெபித்து, தேவ வார்த்தையையும், Pr. ராபர்ட் ராஜா அவர்கள் பகிர்ந்து கொண்டார். மதிய உணவும் IBT மூலமாகக் கொடுக்கப்பட்டு, பிள்ளைகளுக்கு Snacks-ம் கொடுத்து, தேவ அன்பைப் பகிர்ந்து கொண்டு, அவர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டு, அவர்களை மகிழ்வித்து, அலுவலகம் திரும்பினார்கள்.

IBT ஊழியத்தின் மூலமாக செய்யப்படும் மொழிபெயர்ப்புப் பணிகள், மிஷனெரிப் பணிகள், இலக்கியப் பணிகள், சமூகப் பணிகள் தொய்வின்றி இவ்வருடத்தில் சிறப்பாகச் செய்யப்படவும், விரிவாக்கம் பெறவும், மேலே கூறப்பட்ட "Second Chance" Home பிள்ளைகளுக்காகவும், நிர்வாகி, பராமரிப்பாளர்களுக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் பரிபூரணமாய் ஆசீர்வதித்து, தேவநாமம் மகிமைக்கென்று வாழச்செய்வாராக!

“ஷாலோம்”

கர்த்தரின் பணியில்,
*உங்கள் சகோதரன்*
*K. ஜெய்சிங்*

# பணித்தளச் செய்திகள்

<u>*மிஷனெரி : சகோ. சஞ்சய் குமார்*</u>
<u>*பணித்தளம் : சட்டர்ப்பூர் (ம.பி.)*</u>

கர்த்தருக்குத் துதி உண்டாவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் என் மிஷனெரிப் பணிக்காக கௌதம் நகர், சத்ரசாய் நகர், கொராரி பன்னா ரோடு, மகோபா, பான்வாடி, சர்வாய் சந்லா, ஹமா கோர்வ, சோரா, லவ்குஷ்நார், பர்கோகு ஆகிய கிராமங்களுக்குச் சென்று சகோ. ஜான்கி பிரசாத், மகேஷ், ராம் மிலனன்கி, சகோதரிகள் சந்திரா அஹரிவார், பிரீத்தி, ராம்தேவி, சிவானி, லக்காமி மற்றும் சிலரைச் சந்தித்து இயேசு கிறிஸ்துவின் அன்பு, அவரால் வரும் இரட்சிப்புக் குறித்த நற்செய்தியை அறிவித்து கைப்பிரதிகள், நற்செய்திப் புத்தகங்களைக் கொடுத்து, அவர்களின் தேவைக்காக ஜெபித்து வந்தேன். ஞாயிறு ஆராதனை கௌதம் நகரிலும், இரண்டாவது சனிக்கிழமை உபவாசக் கூடுகை சட்டர்ப்பூர் பணித்தளத்திலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சபைக்கு வரும் விசுவாசிகளுக்காகவும், என் மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

<u>*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*</u>
<u>*சகோ. சீனிவாஸ் சாக்கட்*</u>
<u>*மொழி : பாகேலி*</u>
<u>*பணித்தளம் : காரா-ரேவா (ம.பி.)*</u>

தேவனுக்கே துதி உண்டாவதாக!

கர்த்தரின் கிருபையால் கடந்த மாதம் மொழி பெயர்ப்புப் பணியில் சிறுவர் வேதாகமப் புத்தகப் பணியில் பழைய ஏற்பாடு பகுதியிலுள்ள சரித்திர சம்பவங்களின் தொகுப்பில் 6-வது தலைப்பிலிருந்து 21 தலைப்புகள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டப் பகுதிகளில் சரியான படங்கள் தெரிவு செய்து, இணைக்கப்பட்டது. புதிய ஏற்பாடு பாகத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட சம்பவங்களின் தொகுப்பில் 16 தலைப்புகளின் பகுதிகளுக்கு படங்கள் தெரிவு செய்து இணைக்கப்பட்டது. இப்புத்தகம் சரிபார்ப்பு நிறைவு பெற்று, அடுத்த ஆண்டு வெளியிடப்படவும், என் மொழியிலுள்ள புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணிக்காக இம்மாதம் கோவை IBT மையத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. இப்பணிகள் யாவும் தடையின்றி நடக்க கர்த்தர் அருள்புரிய ஜெபியுங்கள்.

----------•----------

<u>*முன்னேற்றப் பணியாளர் :*</u>
<u>*சகோ. கிதியோன்*</u>
<u>*பணித்தளம் : கோயம்புத்தூர் (தமிழ்நாடு)*</u>

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த மாதம் அலுவலகப் பணி, சத்தியவார்த்தை பத்திரிகை போஸ்டிங் முடித்து, முன்னேற்றப் பணியை ஆரம்பித்தேன். இதற்காக செல்வபுரம், பேரூர், ஆலந்துரை, காருண்யா நகர், போத்தனூர், செட்டிபாளையம், சுந்தராபுரம், புளியகுளம், சுங்கம், சிங்காநல்லூர், SIHS காலனி, ஒண்டிப்புதூர், சித்ரா, துடியலூர், சரவணம்பட்டி, கணபதி, வெள்ளலூர், கவுண்டம்பாளையம், நல்லாம்பாளையம், செட்டி வீதி, கொங்கு நகர், ஹோப்ஸ், பீளமேடு, காந்திபுரம், ரத்னபுரி, உப்பிலிபாளையம், சாய்பாபாகாலனி, கள்ளம்பாளையம், சிவானந்தாகாலனி, குனியமுத்தூர் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள IBT தாங்குநர்களைச் சந்தித்து, 2025-ற்கான காலண்டர்களைக் கொடுத்து, காணிக்கைப் பெற்று அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். என் அனைத்துப் பணிகளிலும் தேவன் ஆளுகை செய்து, பயணங்களில் பாதுகாப்பைக் கொடுத்து ஆசீர்வதித்து வருவதற்காக கர்த்தருக்குத் துதியும், மகிமையும் உண்டாவதாக!

*மொழிபெயர்ப்பாளர் : சகோ. கேசப்மிர்கான்*
*மொழி : மிர்கான்*
*பணித்தளம் : பொதர்காம் (ஒடிஷா)*

கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த வருடம் என் அனைத்துப் பணிகளையும் வெற்றிகரமாகச் செய்ய முடிந்தது. கடந்த வருடம் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கோவை IBT மையத்திற்குச் சென்று 1½ மாதங்கள் தங்கியிருந்து என் மொழிபெயர்ப்புச் சார்ந்த பணிகளைச் செய்தேன். என்னோடு மற்ற 7 மொழி பெயர்ப்பாளர்களும் அங்கு வந்து தங்கள் பணிகளைச் செய்தார்கள்.

அங்கிருந்த வேளையில் பழைய ஏற்பாடு பாகத்தில் எஸ்றா, நெகேமியா, எஸ்தர், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா அதிகாரம் 1 முதல் 6 வரையிலும் Paratext Software-இல் கீ-இன் செய்யப்பட்டன. நவம்பர் 10-ஆம் தேதியன்று சகோ. ராஜகுமாருடன் திருப்பூரிலுள்ள "Hosanna Prayer Assembly" சபையில் IBT ஊழியம் மற்றும் என் பணித்தள அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டேன். இதே மாதம் 18-ஆம் தேதியன்று செல்வபுரத்திலுள்ள 'Jesus the Foundation Ministry' சபையில் சகோ. கிதியோன் மூலமாக என் மொழி பெயர்ப்புப் பணி மற்றும் சபைகளை நிறுவியதன் விளக்கங்களைக் கூறினேன். இதே மாதம் 24-ஆம் தேதியன்று கோவை காந்திநகரிலுள்ள படுகா சபையில் IBT ஊழியம் மற்றும் என் மிஷனெரி சாட்சியைக் கூறினேன். டிசம்பர் மாதம் 14-ஆம் தேதியன்று கோவையிலிருந்து எங்கள் பணித்தளங்களுக்குத் திரும்பினோம். என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோதரி. சுபீதா சுவீடன்*
*பணித்தளம் : பாப்பன்பள்ளி (ஒடிஷா)*

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நவம்பர் மாதம் முழுவதும் சிறுவர் இல்ல ஊழியங்களை தேவன் அதிசயமாக நடத்தித் தந்தார். கடுமையான குளிர் நிலவியதால் பிள்ளைகள் அதிகமாக காய்ச்சல், சளி, காது வலி, தொண்டை வலி போன்ற பிரச்சனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பிள்ளைகளுக்காக ஜெபம் செய்தோம். சில பிள்ளைகளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பராமரிக்க தேவன் கிருபை செய்தார். 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு நடைபெற்றது. பிள்ளைகளை கிறிஸ்துவின் அன்பை நோக்கி நடக்க வைக்க தேவன் கிருபைத் தருகிறார். ராமசந்திர ஜோடி என்ற மாணவன் (9-ஆம் வகுப்பு) மாநில அளவில் "கால்பந்தாட்டத்தில்" தேர்வு செய்யப்பட்டுள்ளான். டூலா சோடி (9-ஆம் வகுப்பு) என்ற மாணவன் மாநில அளவில் "கிரிக்கெட்" விளையாடச் சென்றிருக்கிறான். பிள்ளைகள் படிக்கிற பள்ளியில் நடத்தப்படும் போட்டிகளிலும் வெற்றி பெற்று வருகிறார்கள். தேவனுக்கு நன்றி. நமது பிள்ளைகளின் சுகத்திற்காகவும், சிறுவர் இல்ல ஊழியங்கள் மற்றும் ஊழியர்களின் குடும்பங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் : சகோ ராபர்ட்*
*பணித்தளம் : மேட்டுப்பாளையம் / கோவை (தமிழ்நாடு)*

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக!

கர்த்தருடைய கிருபையால் பெலவீனக் காலங்களில் பெலன் தந்து ஏற்றவேளையில் சரியான மருத்துவம் எடுக்கவும் கர்த்தர் கிருபை செய்து சுகத்தோடு இந்த மாதம் முழுவதும் அவருடைய பணியைச் செய்ய பெலன் தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இம்மாதம் ஒரு சில நாட்கள் மட்டுமே அலுவலகப் பணிகளை செய்யவும், முன்னேற்றப் பணிகளைச் செய்யவும் முடிந்தது. காரணம் என்னுடைய சரீரத்தில் எதிர்பாராத விதமாக மூல வியாதியினால் மிகவும்

கஷ்டப்பட்டேன். அதனால் மருத்துவமனைக்குச் சென்று அறுவை சிகிச்சை செய்ய இருந்ததால் இம்மாத பணிகளை என்னால் சரிவர செய்ய முடியவில்லை. எனக்காக கர்த்தரிடம் வேண்டினீர்கள். அதனால் கர்த்தர் சீக்கிரமாகவே எனக்கு சுகம் தந்து பணிக்கு வர கிருபை செய்தார். தொடர்ந்து எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். மற்றும் நமது தாங்குநர்கள் மேட்டுப்பாளையத்தில் உள்ள குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய தேவைகள் மத்தியில் உதாரத்துவமாக கொடுக்கின்ற காணிக்கைகளுக்காகவும், ஆதரவுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!

---

*தெஷியா மொழியில் வெளியிடப்பட்ட புதிய ஏற்பாடு Audio Device தற்போது 300 நெ. அம்மொழி பேசும் கல்வி கல்லாத மக்களுக்கு விநியோகிக்க தேவைப்படுவதாக மொழிபெயர்ப்பாளர் கூறுகிறார். இதன் ஒன்றின் விலை ரூ. 400/- (Concession Rate). இதற்கு ரூ. 1,20,000/- தேவைப்படுகிறது. இதற்கு ஸ்பான்சர் கிடைக்க ஜெபியுங்கள்.*

***- IBT பொருளாளர்***

---

# உலகச் செய்திகள்

★ சிங்கப்பூரில் நவம்பர் 25-ஆம் தேதி தொடங்கிய செஸ் சாம்பியன்ஷப்பில் இந்தியாவின் டி. குகேஷ், நடப்பு சாம்பியனாக இருந்த சீனாவின் டிங் லிரெனுடன் மோதி அவரைத் தோற்கடித்து, உலக செஸ் சாம்பியன் பட்டம் பெற்றார். அவருக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ரூ. 11 கோடி ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது. டி.குகேஷ் இதன் மூலம் இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

★ சிரியாவில் இருந்து 75 இந்தியர்கள் மீட்பு : போர் பதற்றமான சூழ்நிலையில், இந்தியர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் அறிவிப்பு.

★ சீன எல்லைப் பகுதியில் தேசப் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு முக்கியவத்தும் அளிக்கும் வகையில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த அதிகாரிகளுக்கு அதிபர் ஷி ஜின்பிங் அறிவிப்பு.

★ ரஷிய தளபதி படுகொலை; உஸ்பெகிஸ்தான் இளைஞர் கைது! ஸ்கூட்டர் குண்டுவெடிப்பு தாக்குதல் மூலம் ரஷிய ராணுவத்தின் முக்கிய தளபதி இகார் கிறிலோவ் படுகொலை செய்யப்பட்டார்.

★ காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் சமீப காலத்தில் மீண்டும் 38 பேர் உயிரிழப்பு. 203 பேர் காயமடைந்தனர். கடந்த ஆண்டு அக். 7 முதல் நடந்து வரும் தாக்குதலில் சுமார் 45,097 பேர் உயிரிழப்பு.

★ ஜெர்மனியை சேர்ந்த சொகுசு கார் நிறுவனமான “ஆடி” தனது விலையை இந்தியாவில் 3 சதவீதம் வரை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு ஜனவரி 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

## உள்ளம் தொடும் உண்மைக் கதைகள் - ஆர்.எஸ். ஜேக்கப்

# தூக்கம் வராவிட்டால் ஜெபி

### (சென்ற இதழ் தொடர்ச்சி)

அதிகாலையில் கோன்லான் தங்கள் ஒழுங்கின்படி இந்த இரவு சம்பவத்தைக் காவல் அதிகாரிக்குத் தெரிவித்தார். காவலதிகாரி அவர்களைப் பார்த்து "நீங்கள் உயிர் பிழைத்தது அதிசயம். இரண்டு மாதத்திற்கு முன் அங்கு சென்ற ஒரு வெள்ளையன் கொல்லப்பட்டான். உங்களை அவர்கள் கொல்லாததேன்" என்று வினவினார். ''நாங்கள் ஜெபித்தோம்; எங்கள் தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவர்'' என்றான் கோன்லான். "நானும் ஒரு கிறிஸ்தவப் பள்ளியில் கற்றவன். எனக்கும் உங்கள் தேவனைப் பற்றிக் கொஞ்சம் தெரியும்" என்றார் காவல் அதிகாரி.

சில மாதங்களுக்குப் பின் கோன்லான் தன் தாயகமாகிய இங்கிலாந்துக்குச் சென்றான். அங்கே ஒரு கூட்டத்திற்குச் சென்றபோது, தன் நண்பன் ஜானியைச் சந்தித்தான்.

ஜானி தன் நண்பனைப் பார்த்து, நண்பா, சில மாதங்களுக்கு முன் ஓர் இரவில் நடு ராத்திரியில் என்னால் தூங்க முடியவில்லை. உனக்காகவும், பிரிஜிட்டாவுக்காகவும் ஜெபிக்கும்படி இருதயத்தில் ஒரு பாரம் ஏற்பட்டது. நீ எங்கிருக்கிறாய் என்று எனக்குத் தெரியாது. எங்கேயோ தூரமான ஓர் நாட்டில் ஓ.எம். குழுவில் சேர்ந்து வேலை செய்கிறாய் என்பது மாத்திரம் தெரியும். இதைப் போன்ற பாரம் எனக்கு வேறு எப்போதும் நேரிட்டதில்லை" என்றான்.

மீண்டும் ஜானி தொடர்ந்து, "மேலும் நண்பா, மறுநாள் அதிகாலை இன்னொரு ஆச்சரியமான காரியம் நேரிட்டது. காலை வேதாகமப் பாட நேரத்திற்குச் சென்றேன். அங்கு நம் நண்பனைச் சந்தித்தேன். அவன் என்னைப் பார்த்து, "ஜானி, நேற்று நடுஇரவில் தேவன் என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, கோன்லானுக்காகவும், அவன் மனைவி பிரிஜிட்டாவுக்காகவும் ஜெபிக்கும்படி மிகுந்த பாரத்தை என் உள்ளத்தில் தந்தார்" என்றான். ஜானி தொடர்ந்து, "இதைக் கேட்டவுடன் நானும் முந்திய இரவில் எனது பாரத்தைப் பற்றிச் சொன்னேன். இதைப்பற்றி மேலும் அறிய ஆவல் கொண்டோம். ஓ.எம். இயக்குநர் திரு. ஜார்ஜ்க்கு எழுதி அந்த இரவில் உனக்கும், உன் மனைவிக்கும் அதே நேரத்தில் நேரிடவிருந்த அபாயத்தின் முழு விபரங்களையும் எழுதினார். தேவன் எங்கள் உள்ளத்தில் ஜெபப்பாரம் தந்து நாங்கள் ஜெபித்த அதே நேரத்தில்தான், துப்பாக்கி முனையில் உங்கள் ரோவர் நிறுத்தப்பட்டது என்பதை அறிந்து கர்த்தரைத் துதித்தோம்" என்றான்.

***''நான் கர்த்தரைத் தேடினேன்; அவர்... எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்'' சங். 34 : 4.***

***''எழுந்திரு, இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு'' புலம்பல் 2 : 19.***

*குறிப்பு : ஜே.பி. ரூபன் பப்ளிகேஷன்ஸ் கிரியேடிவ் சர்வீஸ் மூலமாக வெளியிடப்பட்ட* ***''உள்ளம் தொடும் உண்மைக் கதைகள்''*** *என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.*

# “200 மொழிகளில்…” திட்டம்

## தேவனுக்கென்று எடுக்கப்படும் ஒரு தீர்மானத் திட்டம்!
## இந்தியாவை சுவிசேஷமயமாக்கும் திட்டத்தில் ஒரு புதிய கட்டம்!!

*__‘‘200 மொழிகளில்…’’ திட்டம் என்றால் என்ன?__*

இந்தியாவில் மொத்தம் 1652 மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு குட்டி பாபேல்! இவைகளில் 5000 ஜனத்தொகையைக் கொண்டதும், வேதாகமமொழிபெயர்ப்பு மிகவும் அவசரமாய், அவசியமாய் இருப்பதுமான மொழிகளின் எண்ணிக்கை 200. இந்த 200 மொழிகளிலும் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் திட்டம் தான் “200 மொழிகளில் திட்டம்”.

*__‘‘200 மொழிகளில்…’’ திட்டம் ஏன்?__*

“ஏனய்யா! உம்முடைய ஆண்டவர் பெரிய ஆண்டவராயிருந்தால், ஏன் என்னுடைய பாஷையிலே அவர் பேசமாட்டாரா?” என்று கேட்கும் பழங்குடியினரின் கூக்குரலின் எதிரொலிதான் “200 மொழிகளில்…” திட்டம்.

ஆம்! இன்று இயேசு ஒரு பழங்குடியினர் இல்லத்திற்குள் நுழைந்தால், அவர்களுடைய தாய்மொழியில் தானே தன்னுடைய கல்வாரியின் அன்பைக் கூறுவார். நாமும் இயேசுவின் வழியைப் பின்பற்றுவோம்!

*__உங்கள் பங்கு!__*

200 மொழிகளில் வேதாகமம் உடனடியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்!

இன்னும் பல கோடி இந்தியர்கள் தேவனுடைய வார்த்தைக்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள்!

தாய்மொழி வேதாகமம், உங்களுக்கு மட்டும் தான் உரிமையா?

சிந்திப்பீர்! செயல்படுவீர்!! இன்றே… இப்பொழுதே!!!

- இந்திய திருச்சபை சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தை எழுதும் இந்த ‘‘200 வேதாகமமொழிபெயர்ப்பாளர்களில்” ஒருவராக சேர முன்வாருங்கள்!
- “200 மொழிகளில்….” திட்டத்தில் இணைந்து, ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் தாங்க தயங்காதீர்கள்!

***ஓரத்தில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தது போதும்! களத்தில் இறங்கி கடமையை நிறைவேற்றுங்கள்!***

*அனைத்து மொழியிலும் மொழிபெயர்ப்போம்! அனைவரது உரிமையையும் பாதுகாப்போம்!!*

# வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

உங்கள் வருட சந்தாவைப் புதுப்பிக்காமலிருந்தால் ரூ. 100/-ஐ கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி, ‘‘சத்திய வார்த்தை’’ பத்திரிகையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். IBT உண்டியல் பெட்டி வைத்திருப்பவர்கள், அதிலுள்ள காணிக்கையை கொடுப்பதற்கு எங்கள் அலுவலகத்திற்கு தெரிவித்தால், அதை பிரதிநிதிகள் அல்லது முன்னேற்றப் பணியாளர்கள் மூலமாகப் பெற்றுக் கொள்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*– ஆசிரியர்*

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

**WORD PUBLISHERS TRUST, Civil Aerodrome Road, Coimbatore - 641 014. Cell : 90470 57414**

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM — BHARAT INTERFACE FOR MONEY | UPI — UNIFIED PAYMENTS INTERFACE

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. IBT அலுவலகத்திற்கு சகோ. சைமன் லூடஸ் என்ற சகோதரன் கடந்த டிசம்பர் மாதத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இவரைப் போலவே அர்ப்பணிப்புள்ள இளைஞர்கள் IBT ஊழியத்திற்கு ஆர்வத்துடன் வந்திணையவும், இதன் மூலமாக ஊழியம் விரிவடைய ஏதுவாக இருக்க ஜெபியுங்கள்.

2. IBT அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் சகோதரி நதியாவிற்கு இம்மாதம் திருமணம் நிச்சயிக்கப்பட்டு நடக்கவுள்ளதற்காக கர்த்தரைத் துதிப்போம். இம்மணவாழ்வு, கர்த்தர் விரும்புகின்ற வாழ்க்கையாக, மகிழ்ச்சியும், ஆசீர்வாதங்கள் நிறைந்த வாழ்வாகவும், கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்தும் குடும்ப வாழ்வாகவும் இருக்க ஜெபிப்போம்.

3. இந்த 2025-ஆம் ஆண்டில் IBT ஊழியம் வளர்ச்சியும், விரிவாக்கமும் அடையும்படியாக IBT ஊழியம் இதுவரை அறிமுகப்படுத்தாத இடங்களில், திருச்சபைகளில் IBT ஊழியம் அறிமுகப்படுத்தப்பட IBT முன்னேற்றக் கூட்டங்கள் நடைபெற, வாய்ப்புகள் கிடைக்கவும், புதிய நபர்கள் அறிமுகம் கிடைக்கவும், ஊழியர்கள், பிரதிநிதிகள் இல்லாத 30க்கும் மேற்பட்ட ஊர்களுக்கு ஊழியர்கள் / பிரதிநிதிகள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

4. 200 மொழித் திட்டத்தில் இதுவரை 37 மொழிகளில் வேதாகமம், புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள், நற்செய்திப் புத்தகங்கள் இவைகளில் சில மொழிகள் 1 நற்செய்திப் புத்தகம் மட்டும், பல மொழிகளில் அதிகமான புத்தகங்கள் வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்டதற்காக கர்த்தரைத் துதிப்போம். மீதமுள்ள 163 மொழிகளிலும் வேதாகமப் புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டியுள்ளது. இதற்குத் தகுதியுடைய மொழிபெயர்ப்பாளர்கள் கிடைக்க பாரத்தோடு ஜெபியுங்கள்.

## SEND ALL YOUR CONTRIBUTIONS

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


| | |
|---|---|
| Editor & Published by On behalf of | **Mr. K. JAISINGH** **WORD PUBLISHERS TRUST** 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014. |
| Printed by | **Mr. C.K. VENKATESH** Chandra Prabha Press 113-118, V.H. Road, CBE-1. |


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd February 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**